
உ
சிவமயம்

# ஞானதீபம்



சங்கீதபூஷணம்

## விஸ்வநாதன் சிவஞானசேகரம்

அளவெட்டி - கோண்டாவில்

2018.06.07

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் தாள் பணிந்து சங்கீத மும்மூர்த்திகளின் இசைவழி உயர்ந்து



இளங்கலைஞர் மன்றம், வட இலங்கைச் சங்கீத சபை, நல்லூரில் முருகநாம சங்கீர்த்தனம், திருப்புகழ், அமுத கானம், இணுவில் இளந்தொண்டர் சபை இசை, பண்ணிசைத் தொண்டு, அளவையில் இசை மேம்பாடு, துர்க்கா மணி மண்டப ஆதீன இசை நிகழ்வு, சென் ஜோன்ஸ்கல்லூரி இசைப்பணி.




திருக்கேதீஸ்வர உற்சவகால பஜனாவளி, கும்பழாவளை தேவஸ்தான பண்ணிசை கொடிக்கவி நவசந்தி பாராயணம்,

அரங்கேற்ற ஒப்பேற்றம். தரம் பெறு கற்பித்தல், ஆசிரிய தராதர பட்டமளிப்பு ஆதியாம் இசைப் பணியில் சிறந்து அரச உயர் விருதான கலாபூஷணம்.




மாண்பு பெற்றார், அளவெட்டியும், அகிலமும் மகிழ்ந்து கொழும்பும் பாராட்டியது அதனால் இசைப்பேறடைந்தார்.



கல்பித, மனோதர்ம, புத்தாக்க இசைவடிவங்களில் மேதாவியான

## சங்கீத பூஷணம் சிவஞானசேகரம் அவர்கள் முப்பெரும்



மூதறிஞர்களின் ஆசீர்வாதத்தோடு, இசைக்காகத் தனது உடல் பொருள் ஆவிதனைக் காணிக்கையாக்கியவர்.



தனது குருநாதரின் மணிவிழாவின் போது, அவர் நூறாண்டு வாழ வாழ்த்துப்பா பாடி அளவைக்கு வாழ்வளித்தபேறு கொண்டு, இசையே தனது மூச்சாகி விநாயகப் பொற்பதமடைந்தார்.

கம்பன் கழகம், இளங்கலைஞர் மன்றம், சுந்தர ஆஞ்சநேயர், வட இலங்கைச் சங்கீத சபை, ஆதீனம், யாழ்ப்பாணம் இந்தியத் தூதுவராலயம், நல்லூர், பெருமாள் ஆலயம்



# விஸ்வநாதன் சிவஞானசேகரம்

யாழ் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீத கலா பூஷணம், பண்ணிசைவாணர், கலாவித்தகர், கலைஞானச்சுடர், செல்விசைக்கலைஞர், ஓய்வுநிலை இசை ஆசிரியர்(யாழ் பரியோவான் கல்லூரி), பொருளாளர் வட இலங்கை சங்கீதசபை, யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் வருகை விரிவுரையாளர் விஸ்வநாதன் சிவஞானசேகரம் 08.05.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதன் - இலட்சுமிஅம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவயோகராணியின் அன்புக் கணவரும் தர்ஷிலா(கனடா), நிக் ஷலா(ஆசிரியர் - சிமாட் கிட்ஸ்), கலைவாணி(விவசாயபீடம் - யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராம்(கனடா), திருவானந்தன்(பிரதேச செயலகம் - மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரிஷ்வினின் அன்புப் பேரனும் திருமதி விக்னேஸ்வரி கந்தையா (ஓய்வு நிலை ஆசிரியை), திருமதி சி.மாங்கயற்கரசி(ஓய்வு நிலை ஆசிரியை) மற்றும் காலஞ்சென்றவர்களான சிவராஜசிங்கம், சிவானந்தராசா, சிவதாசன், சிவரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகி, ஆதிரை, சிவநேசன், மற்றும் காலஞ்சென்றவர்களான மனோராணி, கந்தையா, அன்னலட்சுமி, சிவராசா மற்றும் நேசமலர், ஞானமலர், பரமசிவம், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தம்பிமுத்து, இராசையா, பேராயிரவர், விஜயலட்சுமி, இந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும்சிவதாசன், சிவதர்ஷினி, சிவதர்மினி, கபிலன், நவநீதன், நந்தகுமார் ஆகியோரின் சிறியதந்தையும் சிவானுஜன், பிரணவி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், பெரியோர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

(CS 16472) (14.17)

**0212053378/0766695217**

ஆகியவற்றில் பஞ்சரத்தின ஆராதனையைச் செவ்வனவே அரங்கேற்றி வைக்க மூலகாரணமாகத் திகழ்ந்தவர். அதே போலத் திருமுறை முற்றோதல் நிகழ்வுகளை உரிய பண்களோடு ஓதிட வழிபுரிந்த ஆன்மீகப் பரோபகாரியாவார். அளவோலையிலேயே அவரது இறுதி இசைப்பாடல் ஒலித்தது.

# உண்ணாமல் உறங்காமல் ஓயாது இசை வளர்த்த ஒப்பற்ற அதிசயக் கலைஞனான சங்கீத பூஷணம்,

## கலாபூஷணம்

## அமரர் விஸ்வநாதன் சிவஞான சேகரம்

### அவர்கள் அளவையூர் ஈன்றெடுத்த ஓர் அற்புதக் கலைஞன்



அளவெட்டி விஸ்வநாதன் இலட்சுமியம்மா தம்பதிகளின் மகனாக அற்புதம் 1949.07.13 பொற்பதம் 2018. 05.08 திகழ்ந்தது. ஆரம்பக் கல்வி சதானந்தா வித்தியாலயம். உயர் கல்வி அருணோதயக் கல்லூரி. சங்கீத பாக்கியமளித்த குருவாக அளவையூர் சங்கீத பூஷணம் திரு. வி.கே. நடராஜா அவர்கள் அமரர் சங்கீத வித்துவான் அ. திலகேஸ்வரன் அமரர் பொன் முத்துக்குமாரன். 1976 இல் திருப்பனந்தாள் ஆதீனமதில் திருமுறைப் பண்ணிசை மணியும், 1977இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமதில் சங்கீத பூஷணமும் பட்டத்திற்குப் பாத்திரமானார்.

மேலும் நல்லூர், தெல்லிப்பளை, கொழும்பு, இணுவில், அளவெட்டி பிரதேச வாரியங்கள் வாயிலாக கலைஞானச்சுடர், கலைச்சுடர், கலாபூஷணம், திருநெறிய தமிழிசை வாணர், இசைக் கலாநிதி, ஆகிய பட்டங்களுக்கு பெறுமதியானார்.



வசாவிளான் ம.மகா வித்தியாலயத்திலும், யாழ் சென்ற் ஜோன்ஸ் கல்லூரியிலும் மொத்தமாக 33 வருடங்கள் ஆசிரிய சேவைக்கு மகுடம் சூட்டினார். 1984.06.04 இல் தெய்வீக நங்கை சிதம்பரப்பிள்ளை சிவயோகராணியைத் திருமணம் புரிந்து 3 பெண் இரத்தினங்களுக்குத் தந்தையானார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதல் தர பண்ணிசைக் கலைஞர் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைக் கழக முன்னாள் இடை வரவு விரிவுரையாளர், வட இலங்கைச் சங்கீத சபைப் பொருளாளர், பிரதம பரீட்சகர், நல்லூர் இளங்கலைஞர்மன்ற நீண்ட நாள் உறுப்பினராகவும், விழாக்குழு பொறுப்பாளராகவும், நல்லூர் ஆதினம், துர்க்கா மணிமண்டப இசை நிகழ்ச்சிப் பொறுப்பாளராகவும் விசேடித்தார். நல்லூர் கும்பழாவளை உற்சவகால இசைவாணராக மட்டுமல்ல திருக்கேதீஸ்வரம் முதலான இலங்கையின் பிரதான ஆலயங்களில் பண்ணிசை, சங்கீத இசையின் கொடையாளியாகவும் இணுவில் இளந்தொண்டர் சபையின் சங்கீத குருவானவராகவும் மாட்சி பெறுகிறார்.

மனோதர்மக் கலைஞனாக மிளிரும் இவர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகளை கச்சேரி தர்மம் வழுவாது அரங்கேற்றியுள்ளார். சௌக்காலப் பிரயோக அலங்காரங்களினால் இசையைச் செப்பனிடும் இவர் இலங்கைக்கு வரும் இந்தியா ஓதுவார்கள், இசைக்கலைஞர்களுடன் இசைந்து மகிமை சேர்ப்பவராவார். மாருதப் புரவீகவல்லி ஸ்தாபித்து வணங்கி, வரம் பெற்ற அளவை கும்பழாவளையில் நவசந்திப் பண், தேர் உற்சவ இசையரங்கு, நவராத்திரி இசை ஆராதனை, நாம சங்கீத கீர்த்தனம், கொடிக்கவி பாடுகின்ற அளவையூர் மூத்த பூத்திருக்கின்ற பெருங்கலைஞன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" (336)

வரலாற்று நாயகனாக இசையுலகம் கரம் கூப்புகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் (50)

மனிதருள்ளும் தேவராக இன்று விண்ணுலகில் அரசாள்கிறார்.

அளவையூர்
**கே.எஸ் சிவஞான ராஜா**
(0776179027)